**கவனிக்க.**-2018.07.13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2081 - 2018 ජූලි මස 20 වැනි සිකුරාදා - 2018.07.20

*2081 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | 126 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 128 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம் சட்டமூலம் 2018, யூலை மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) மக்கள் வங்கி (திருத்தம்) சட்டமூலம் 2018, யூலை மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, ஓகத்து மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, யூலை மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

125- B81431-353(2018/07)

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

*இணைப்பு - 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

சப்பிரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள கலவான பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஜீ. டி. எல். உதய குமாரி ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் சனாதிபதி ஜூனியட் ரிசட் ஜயவர்தன அவர்களால் 1982.04.20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள ரத் /ப்ர/616 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ஹங்கரங்கயில் வசிக்கும் முத்துகுட ஆரச்சிலாகே ஜோன் சிஞ்சோ என்பவருக்கு கையளிக்கப்பட்டு இரத்தினபுரி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் கா. அ. 6/408 ஆம் இலக்கத்தின் கீழ் 1990. 03. 21 ஆம் திகதி பதிவு செய்யப்படுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளாராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப் பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2018.07.29 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

இரத்தினபுரி நிர்வாக மாவட்டத்தின் கலவான பிரதேச செயலாளர் பிரிவின் மெத பற்றில்/குகுலு கோறளையிலுள்ள கலவான கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த (தற்பொழுது ஹங்கரங்கலை கிராம அலுவலர்) ஹங்கரங்கலை எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் அத்தியட்சகர் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு -- ஆம் இலக்க வெளிக்களத் தாளில் 246 இரேகை வரைதலில் 159 ஆம் இலக்க காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 01 ஏக்கர் 03 றூட் 07 பேச்சஸ் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான பெலபொல்குலனை ஹேன்யாய அரச காணித்துண்டு “தொல தெக்கட்ட அதர மூகலான”

வடக்கு : காணித்துண்டு இல. 145, 155, 156 ;
கிழக்கு : காணித்துண்டு இல. 145, 160 ;
தெற்கு : காணித்துண்டு இல. 157, 160 ;
மேற்கு : காணித்துண்டு இல. 156, 157.

ஜீ. டீ. எல். உதயகுமாரி,
பிரதேச செயலாளர்,
கலவான.

2018. 04. 19

07-549

---

*இணைப்பு - 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப்பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

தென் மாகாண சபையின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெலிஅத்த பிரதேச செயலாளராகிய காஞ்சனா குமாரி தல்பாவில ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ் அதியுத்தமராம் சனாதிபதியினால் 1992.11.05 ஆந் திகதி கொடையளிப்புச் செய்யப்பட்ட ஹம்/பிற/ 18551 இலக்கம் கொண்ட கொடைப் பத்திரத்தின் உரிமையாளரான தம்முள்ளையில் வசிக்கும் நாயிமன ஊருபொலகெ ரஞ்சனீ என்பவருக்கு கொடையளிப்புச் செய்து தங்கல்ல மாவட்டப் பதிவாளர் காரியாலயத்தில் 668 இன் கீழ் 1993.10.18 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டதுமான பின்வரும் அட்டவணையிலுள்ள காணிக்கு மாற்றுரிமையாளராக சட்டரீதியாக எவரும் இல்லை எனவோ அல்லது உரித்துடையவர் ஒருவர் இருந்தும் அவர் மாற்றுரிமையாளராவதற்கு விருப்பம் இன்மையால் மாற்றுரிமையாளர் ஒருவரும் அற்றதானதென தெரியப்பட்டுள்ளதால் மேற்படி கொடைப்பத்திரத்தை உரிய சட்டவாக்கின் 104 ஆவது சரத்தின் கீழ் இடைநிறுத்திட இத்துடன் அறியத்தருகின்றேன். இது விடயமாக ஏதும் எதிர்ப்பு இருப்பின் அதனை 2018.08.17 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்துமூலம் அறியத்தரவும்.

### அட்டவணை

ஹம்பாந்தோட்டை மாவட்டம் பெலிஅத்தை பிரதேச செயலாளர் பகுதியின் கிருவாபத்துவ தெற்கு தம்முள்ள கிராம அதிகாரிப் பிரிவில் தம்முள்ள என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் வசமுள்ள மற்றும் நிலஅளவையாளரால் நிலைப்படுத்திய அ. க. பி. எனும் களப்பதிவேட்டில் /நிலைப் பதிவில் இலக்கம் 282 என்று துண்டாக்கல் வரைபடத்தில் ..... ஆல் நிலைப்படுத்திய இலக்கம் .......... எனும் ரேகைக் குறிப்பேட்டினை 108 என்றதான காணித் துண்டாகுமென காண்பிக்கப்பட்டுள்ளதானதும் அளவில் 0.200 ஹெக்டேயார் பரப்பளவு கொண்டதும் பின்வருமாறானதான

எல்லைகளுக்குட்பட்ட அரச காணியான மொரகாஹேன அலிய வெட்டுனுஆர:

வடக்கு : 106 ஆம் இலக்க காணித்துண்டு;
கிழக்கு : புகுவழி மற்றும் 107 ஆம் காணி;
தெற்கு : 113 ஆம் காணி;
மேற்கு : 109 ஆம் இலக்க காணித்துண்டு.

காஞ்சனா குமாரி தல்பாவில,
பிரதேச செயலாளர்,
பெலிஅத்த.

2018.03.21.

07 – 552/1

---

இணைப்பு - 9

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் , காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உட்பிரிவுக்கேற்ப 1996 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆந் திகதி தந்திரிகே சைமன் அப்பு என்பவருக்கு ஹம்/7/ப்ர/31422ஆம் இலக்க அளிப்பின் கீழ் பாரதீனம் செய்யப்பட்டு தங்கல்ல மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 1997.05.20 ஆந் திகதி 1746 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்படுள்ள காணிக்கு, சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால்/ இருக்கும் பின்னுரிமை வாரிசு கோர விரும்பவில்லை, என தென் மாகாணசபைக்குட்பட்ட கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் இரேஷா லியனகே ஆகிய நான், இத்தால் அறியத்தருகிறேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின், 104 ஆம் பிரிவின் கீழ், மேற்கூறிய அளிப்பை ரத்து செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 2018.08.17 க்கு முன்னர் எழுத்திலான சமர்ப்பணம் மூலம் எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

#### அட்டவணை

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட எப். வி. பி. 390 ஆம் இலக்க வெளிக்கத்தாளின் பிரகாரம் - அவர்களினால் தயாரிக்கப்பட்ட - இலக்கத் துண்டுகள் வேறாக்கப்பட்ட வரை படத்திலிருந்து – என்பவரினால் நிர்மாணிக்கப்பட்ட - இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 821 2 /2 எனக் காட்டப்பட்டுள்ளதும் ஹம்பந்தோட்ட நிருவாக மாவட்டத்திற்குட் பட்ட கட்டுவன பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த உதுரு கிருபா பற்று /கோரளையிலுள்ள உலஹிட்டியாவ கிழக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த உலஹிட்டியாவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் 0.124 ஹெக்டயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி.

இதன் எல்லைகள் வருமாறு :-

வடக்கு : காணி துண்டு இலக்கம் 821 1/2;
கிழக்கு : காணி துண்டு இலக்கம் 548;
தெற்கு : காணி துண்டு இலக்கம் 551, 822, 553;
மேற்கு : காணி துண்டு இலக்கம் 546.

இரேஷா லியனகே,
பிரதேச செயலாளர்,
கட்டுவன.

2017. 04. 03.

07 – 552/2

---

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தினை பதிவழித்து நீக்குதல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

ஊவா மாகாண சபையின் பதுளை மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் /பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) ஆகிய கெதபலாவே கெதர நிஹால் குணரத்ன ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் பிரிவின் கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1995, நவெம்பர் 08 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள பது/ப்ர/15172 ஆம் இலக்க அளிப்பு பத்திரத்தின் உரிமையாளரான கெபில்லேவெல தெற்கு பண்டாரவளை எனும் முகவரியில் வசிக்கும் திருமதி மாரியன் லிலீ என்பவருக்கு கையளிக்கப்பட்டு பதுளை மாவட்டப் பதிவாளரின் அலுவலகத்தில் எல்டீஒ 3899/1995 ஆம் இலக்கத்தின் கீழ் 1995. 12.08 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணை யில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்கு சட்ட ரீதியான உரிமை யாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு யாரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்பு பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ், பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதும் ஆட்சேபனை இருந்தால் அவற்றை 2018.08.10 ஆந் திகதிக்கு முன்னதாக எனக்கு எழுத்து மூலம் அறியத்தருதல் வேண்டும்.

**அட்டவணை**

பதுளை நிருவாக மாவட்டத்தின் பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவின் மகபலாத பற்றில்/ கோறளையில் இனிகம்பெத்த கிராம அலுவலரின் பிரிவில் உள்ள கெபில்லேவெல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் நாயகம் அவர்களின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 28 ஆம் இலக்க வெளிக்களத் தாளில் 118 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் ..... அவர்களால் தயாரிக்கப்பட்ட 118 பிற்சேர்க்கை 26 இரேகை வரைதலின் 745 ஆம் இலக்கக் காணித்துண்டு எனக் குறிப்பிடப்படுவதும் 0.0245 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதும் கீழ்வரும் எல்லைகளைக் கொண்டதுமான அரச காணி :-

வடக்கு : காணித்துண்டு இல. 748, 746, 743;
கிழக்கு : காணித்துண்டு இல. 746, 743, 744;
தெற்கு : காணித்துண்டு இல. 744, 763;
மேற்கு : காணித்துண்டு இல. 763, 748;

ஜீ. ஜீ. என். குணரத்ன,
பிரதேச செயலாளர்,
பண்டாரவளை.

2018, மே 18.

07 - 589

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/54710
மாகாணக்காணிஆணையாளாரின்
இல. : පළාත්/ ඉකො/ ඉ9/ බිංගි/ දී. බ.01

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குருநாகல மாவட்டம், பிங்கிரிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட இல. 1436, போவத்த கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த போவத்த கிராமத்தில் அ. க. பி. 14682 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் ஏ எனக் காட்டப்பட்டுள்ளதும் 0.06324 ஹெக்டேயார் விஸ்தீரமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்கு தருமாறு கேட்டு இலங்கை மின்சார சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு

வடக்கு : 1 யூ;
கிழக்கு : ஏ பேண்டட் வீதி;
தெற்கு : 1 யூ;
மேற்கு : 1 யூ.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நியந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2018. 05. 23 தொடக்கம்);

(ஆ) **வருடாந்தக் குத்தகை**.- குத்தகையானது அமுல் படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ரூபா ஐந்து மில்லியனை விட (ஐந்து மில்லியன் 5,000,000) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலை மதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட (ஐந்து மில்லியன் 5,000,000) தாண்டும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீடாளரின் விலை மதிப்பீட்டாளரினால் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது எல்லா ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் முந்தைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்திற்கு சேர்க்கப்பட வேண்டும்;

*தவணைப்பணம்*.- தவணைப்பணம் அறவிடப்பட மாட்டாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) பிரதேச செயலாளர், மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்கார் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையினும் கீழ் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டபிள்யூ. கே. என். நயோமி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகெதமெதுர"
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018. 07. 20.

07 - 550

---

காணி ஆணையாளர் நாயகத்தின்
இல. : 4/10/52193
மாகாணக் காணிஆணையாளரின்
இல. : இ6/நவ/ச.ச./பெவ/16

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம் நவத்தேகம பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 645/1, இங்கினிமிடிய கிழக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த இங்கினிமிடிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப். வி. பி. 3221 எனும் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 208 மற்றும் 213 எனக் காட்டப்படுள்ளதும் பேர்ச்சஸ் 35 விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை குத்தகைக்கு தருமாறு கேட்டு இங்கினிமிட்டிய பிரதேச மக்களின் பாவனைக்காக வரையறுக்கப்பட்ட நவத்தேகம பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் விண்ணப்பித்துள்ளனர் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:-

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 212 மற்றும் 208 (பாடசாலை);
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 208 (பாடசாலை);
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 244 (பாதை);
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 244 மற்றும் 213 (பாடசாலை).

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது:-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2018.04.06 தொடக்கம் 2048.04.05)

**வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 2018 ஆம் அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியின் 2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்;

*தவணைப்பணம்* .- இல்லை;

(அ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருடம் காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி சமுர்த்தி நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2018.04.06 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையினும் சபைக்குள் கைமாற்றம் செய்தல் அல்லது இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க் குத்தகைக்கு விடுதல் அல்லது கைமாற்றம் செய்வதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்

வை. வை. என். பெரேரா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6 ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018. 07. 20.

07 - 551

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/54643.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : PLC/2/LP/4-71.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

இரத்தினபுரி மாவட்டம், இரத்தினபுரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ரத்கஹ 162 எப் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ரத்கஹ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எள்வி பி 400 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 582 எனக் காட்டப்பட்டுள்ளதும் பேர்ச்சஸ் 0.9594 விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வாகனத் தரிப்பிடம் மற்றும் தஹம் பாடசாலை அமைக்கும் நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டுத் ரத்கஹ புஞ்சி தம்பதிவ அசுமஹ ஸ்ராவக புதுரஜ மஹா விகாரஸ்தான கார்ய சாதக சமிதி விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 366;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 410, 411;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 222 (தும்மலவின்ன வடிகால்);
மேற்கு : தும்மலவின்ன வடிகால்.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (மாண்புமிகு அமைச்சர் அனுமதித்த 2018.05.18 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடு செய்யப்பட்ட மாண்புமிகு அமைச்சர் குத்தகையை அனுமதித்த வருடத்தின் காணியின் அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 1/2 வீதம் வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும் ;

*தவணைப் பணம்.*- இல்லை;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த தினத்திலிருந்த ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேசச் செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும் ;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி வாகனத் தரிப்பிடம் மற்றும் தஹம் பாடசாலை நடத்தல் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது ;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும் ;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஏ) மாண்புமிகு அமைச்சர் அனுமதி அளித்த தினத்திலிருந்து ஐந்து வருடங்கள் முடியும் வரை இந்தக் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க்குத்தகை தவிர்ந்த வேறு கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் அனுமதிக்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் கொடுக்கப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களைக் இந்த அறிவித்தல் பிரசுரமான திகதியிலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத் தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

எஸ்.ஏ. ஏரந்திக்கா டபிள்யு. குலரத்ன,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை.
2018, யூலை 20.

7 - 588

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

மாத்தறை மாவட்டம், கிரிந்த புகுல்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிரிந்த புகுல்வெல்ல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த அரச காணியை பயிர்செய்கை நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டு 03 நபர்கள் விண்ணப்பித்துள்ளனர் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது:-

(அ) **குத்தகைக் காலம் .-** முப்பது (30) வருடங்கள் (1995.06.15 தொடக்கம்);

**வருடாந்தக் குத்தகை.-** பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டிற்கமைய 1995 ஆம் வருடத்திற்கான வர்த்தகப் பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்து ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 வீதத்திற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்;

*தண்டப்பணம்.-* காணியின் அபிவிருத்தி செய்யப்பட்ட பெறுமதியின் 4% இன் மும்மடங்கு தொகை தண்டப்பணமாக செலுத்தப்படல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வணணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி பயிர்செய்கை நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேசச் செயலாளர், இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) குத்தகை தொடங்கிய தினத்திலிருந்து குறைந்தது 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் கீழ்க்குத்தகைக்கு விடுதல் அனுமதிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காக கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை கீழே குறிக்கப்பட்டுள்ள தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டபிள்யு. கே. என். நயோமி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர"
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, யூலை 20.

| தொ. இல. | கா.ஆ. இல | பெயர் | கிராம அலுவலர் பிரிவு | பட.இல | கா.து. இல. | பரப்பளவு | காணி எல்லைகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | வடக்கு | கிழக்கு | தெற்கு | மேற்கு |
| 01. | 4/10/40732 | சிறிநாயக்க லொக்குகே டயஸ் | 327 டி, வதுகொல கண்ட வடக்கு | காணி உத்தியோ கத்தரால் வரையப் பட்டது | 02 | றூட். 02 பேர்ச்சஸ் 15 | வரைபட இல. 13793 /64 | வரைபட இல. 933 கா.து இல. 03, 12 மற்றும் பாதை | கா. து. இல. 12 மற்றும் பாதை | கா. து இல. 01, 12 மற்றும் பாதை |
| 02. | 4/10/40734 | ராமநாயக்க ஹேவா வெல்பேஜ் டொனெல்ட் | 327 டி, வதுகொல கண்ட வடக்கு | காணி உத்தியோகத் தரால் வரையப் பட்டது | 93 | றூட்.02 | வரைபட இல. 1042 கா.து. இல. 75, 74 | லெவ்டெநியா வத்த | கா.து இல. 94, பாதை வரைபட இல. 1042 | வரைபட இல. 1042 கா. து இல. 92 |
| 03. | 4/10/41238 | வலகெதர கமஹே பீட்டர் | 327 டி, வதுகொல கண்ட வடக்கு | காணி உத்தியோகத் தரால் வரையப் பட்டது | 21 | றூட். 02 | வரைபட இல. 933 கா.து. இல. 20 மற்றும் 07 பாதை | வரைபட இல. 933 கா.து. இல. 07 மற்றும் 22 பாதை | வரைபட இல. 933 கா.து. இல. 22,24 மற்றும் 19 பாதை | வரைபட இல. 933 கா.து. இல. 19 மற்றும் 20 பாதை |

7-642

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.